3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இந்தச் சட்டத்தை நிலைக் குழுவிற்கு அனுப்பி இன்னும் சற்று ஆய்வுகளை மேற்கொண்டு செயல்படுத்தினால் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறோம். எனவே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையில் எதிர்த்து, நிலைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பண்பாடு தொடர்பான பிரச்சினை. ஏற்கெனவே சட்டமன்றத்தில் இதுகுறித்துப் பேசி, ஒரு தீர்மானத்தையும் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இதை நீங்கள் சற்று ஆய்வு செய்து...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையில் ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லிவிட்டு, அமருங்கள். சட்டமுன்வடிவை ஆய்வு செய்யும்போது மற்ற கருத்துகளைத் தெரிவிக்கலாம்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நிலைக் குழுவிற்கு அனுப்பி, அதற்குப் பிறகு விவாதித்து முடிவெடுக்கலாம் என்று அறிமுக நிலையில் நான் இதை ஆட்சேபிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

4. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41– வருவாய்த் துறை

(ஆ) கோரிக்கை எண் 51– இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(இ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

. . .

(அ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41 –வருவாய்த் துறை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*